வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 07.08.2025 வியாழக்கிழமை இதழ் : 219 பக்கங்கள் : 12

# "உங்களின் கரிசனைகளை மனித உரிமைகள் பேரவைக்கான எனது அறிக்கை பிரதிபலிக்கும்"

## மனித புதைகுழிகள் மூலம் வெளிவரும் ஆதாரங்களை பாதுகாப்பது அவசியம்

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் பதில் கடிதம்

ஜெனிவா, ஒகஸ்ட் 07

தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் சிவில் சமூகத்தினரும் மதத் தலைவர்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துக்கும் அனுப்பி வைத்த கடிதத்துக்கு பதில் கடிதத்தை எழுதியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், தனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கரிசனைகளை பிரதிபலிக்கும் விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான தனது அறிக்கை இடம்பெற்றிருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தின்போது பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் பலருடனான தனது சந்திப்பு மிகவும் உணர்வுபூர்வமானதாக காணப்பட்டது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், செம்மணி மனித புதைகுழிக்கான எனது விஜயமும் பாதிக்கப்பட்டவர்கள், சட்டத்தரணிகளைச் சந்தித்தமை அந்தப் பகுதியில் இடம்பெற்ற பெரும் நினைவு கூரலை பார்வையிட்டமையும் மிகவும் உணர்வுபூர்வமானதாக காணப்பட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனது இந்த விஜயங்கள் ஆதாரங்களை பாதுகாக்கவேண்டியதன் அவசியத்துக்கும் முழுமையான சுயாதீன விசாரணைக்குமான காண்பு நிலையையும் அவசரத்தையும் வழங்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் இதுவரை சுயாதீனமான வலுவான நியாயமான பொறுப்புக் கூறும் பொறிமுறைகளை ஏற்படுத்த தவறிவிட்டனர் எனத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர், அவர்கள் முழுமையான சர்வதேச தராதரங்களை எட்டுவதற்கு தவறிவிட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ)

## சஷீந்திர ராஜபக்ஷ கைது



கொழும்பு, ஒக. 07

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் மகனும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த அரசாங்கத்தின்போது சீன நிறுவனத்திடமிருந்து தரமற்ற கனிம உரத்தை இறக்குமதி செய்தமையினால் அரசாங்கத்துக்கு நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

11

## ஐ.நாவுக்கு சொல்லவேண்டிய செய்தியை நாங்கள் சரியான விதத்தில் சொல்வோம்

### இப்படி கூறுகின்றார் சுமந்திரன்

கிளிநொச்சி, ஒக. 07

தமிழ் மக்கள் மீதான இன வன்முறைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு சொல்ல வேண்டிய செய்தியை நாங்கள் சரியான விதத்தில் சொல்லுவோம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளருமான எம். ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேற்கண்ட விடயத்தினை தெரிவித்துள்ளார்.

11

## செம்மணியில் 5 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக. 07

செம்மணி பகுதியில் மனித புதைகுழிகளில் இருந்து நேற்றைய தினம் புதன்கிழமை, புதிதாக 05 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளில் 3 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

எலும்புக்கூட்டு தொகுதியொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செருப்புடன் அடையாளம் காணப்பட்ட நிலையில் குறித்த எலும்புக்கூடு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இடுப்பில் தாயம் ஒன்றுடன் எலும்புக்கூடு தொகுதியொன்று

11

## மன்னாரில் நேற்று மண் மீட்பு விழிப்புணர்வுப் போராட்டம்!

மன்னார், ஒக. 07

மன்னார் மாவட்டத்தில், பல்தேசிய நிறுவனங்களின் இல்மனைட் கனிம மணல் சுரண்டல்களால், மக்களின் வாழ்விடங்கள் மற்றும் பூர்வீக நிலங்கள் அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், குறித்த நடவடிக்கைகளை கண்டித்து மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு போராட்டம் நேற்று காலை மன்னார் பஜார் பகுதியில் இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய நிறுவனம், அகழ்வுக்கான

11

## 5 ஆண்டுகளில் மாற்றங்கள் செய்ய முடியாது 15-20 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டும்

### ரில்வினிடம் கூறியது சீன கம்யூனிஸ்ட் கட்சி

கொழும்பு, ஒக. 07

இலங்கையில் விரும்பிய மாற்றங்களைக் கொண்டுவர 15 - 20 ஆண்டுகள் ஆட்சியில் இருக்க வேண்டும் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சி தன்னிடம் கூறியதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

ஐந்து ஆண்டுகளில் மாற்றங்களைச் செய்ய முடியாது என்றும், நான்கு அல்லது ஐந்து தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியில் இருக்க வேண்டும் என்று அவர்கள் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில்

11

## உள்ளூராட்சி அதிகாரங்களை கட்டுப்படுத்தும் மத்திய அரசு

### வர்த்தமானியை மீளப்பெறுவீர்களா என சபையில் சிறீதரன் எம்.பி கேள்வி

கொழும்பு, ஒக. 07

உள்ளூராட்சி மன்றங்களை நகர அபிவிருத்தி சபைகளாக வெளிப்படுத்தப்பட்டதால் பிரதேச சபையிலுள்ள அதிகாரங்களை மத்திய அரசின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை கட்டுப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் உள்ளூராட்சி மன்றங்களை நகர அபிவிருத்தி சபைகளாக

11

## செம்மணி ஸ்கான் முடிவுகள் மூன்று வாரங்களில் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 07

அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் இடம்பெற்ற ஸ்கான் பரிசோதனைகள் தொடர்பான இறுதி அறிக்கை, எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார்.

சித்துப்பாத்தி இந்துமயானத்தில் மேலதிகமாக புதைகுழிகள் இருக்கின்றனவா என்று அறிவதற்காக தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் (ஜி.பி. ஆர்.) ஸ்கான்

11

## ஒரு வாரத்திற்குள் நீதிபதிகள் ஐவர் பணியில் இருந்து நீக்கம்

கொழும்பு, ஒக. 07

இலங்கை நீதித்துறை சேவை ஆணைக்குழுவால் ஒரு வாரத்துக்குள் ஐந்து நீதிபதிகள் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைநீக்கம் செய்யப்பட்டவர்களில் மொறட்டுவை நீதவான் திலின கமகே, மஹியங்கனை மேலதிக மாவட்ட நீதிபதி ரங்கனி கமகே மற்றும் புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று நீதிபதிகள் ஆகியோர் அடங்குவர்.


11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் கொண்டு வரப்பட்ட காற்றாலைப் பாகங்கள்

## தள்ளாடி சந்தியில் மக்கள் போராட்டம்



மன்னார், ஓக. 07

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காற்றாலை மின் கோபுர பாகங்களுடன் காணப்பட்ட பாரிய வாகனங்கள் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நூற்றுக்கணக்கான பொலிஸாரின் பாதுகாப்புடன் மன்னார் நகரை வந்தடைந்தன.

குறித்த காற்றாலை மின் கோபுரங்களுக்கான பாகங்களை மன்னார் நகருக்குள் எடுத்து வரக்கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மன்னார் தள்ளாடிச் சந்தியில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த இரு நாட்களும் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் மன்னார் பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை மூடி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டம் மற்றும் மன்னார் நகருக்குள் கொண்டு வரப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களை கொண்டு வர வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைத்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சுமார் 5 இற்கும் மேற்பட்ட காற்றாலை மின் கோபுரங்களுக்கான காற்றாலைகளை மன்னார் நகருக்குள் எடுத்து வர வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைத்து மன்னார் தள்ளாடி பகுதியில் நேற்று முன் தினம் இரவு மக்கள் கண்காணிப்புப் போராட்டத்தையும் மேற்கொண்டனர்.

குறித்த பகுதியில் இருந்த மக்கள் அவ்விடத்தில் இருந்து சென்ற நிலையில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் கலகம் அடக்கும் பொலிஸாரின் பாதுகாப்புடன் காற்றாலை மின் கோபுரங்களை ஏற்றிய வாகனம் மன்னாரை நோக்கிச் சென்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களில் அதிகமானோர் அங்கிருந்து சென்ற நிலையில் குறைந்தளவிலான மக்களே குறித்த பகுதியில் நின்றனர்.

இந்நிலையில் பொலிஸார் அவ்விடத்தில் நின்றவர்களை அச்சுறுத்தி பலத்த பாதுகாப்புடன் மன்னாரை நோக்கி அனுப்பி வைத்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (அ)

# மயிலணி, மல்லாகத்தில் கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 07

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலணி மற்றும் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் இரவு இணுவில் தியேட்டரடியில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களிடமிருந்து 9 கிலோ 794 கிராம் எடையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவரும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கையளிக்கப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தீவக மாணவர்களுக்கான இலவச கல்வி கருத்தரங்கு



யாழ்ப்பாணம், ஓக. 07

கல்வி பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்காக பிரபல சட்டத்தரணி தேவசேனாதிபதியால் முன்னெடுக்கபட்டு வரும் இலவச கல்வி கருத்தரங்கு நேற்று ஊர்காவற்றுறையில் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மண்டபத்தில் தீவக கல்வி வலய மாணவர்களுக்காக கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாணவர்களுக்கு இலவச புத்தகங்கள் வழங்கி வைக்கபட்டதோடு பாடங்கள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய கல்வி வலயங்களிலும் குறித்த கருத்தரங்கு இடம்பெறவுள்ளதுடன் கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளர் லாவண்யா சுகந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ)

# சண்டிலிப்பாயில் 'ஊர் கூடி மகிழ்வோம்' விசேட புத்தக கண்காட்சியும் நாடக நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஓக. 07

கூத்தாட்டு அவைக்களத்தின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை பௌர்ணமி தினத்தில் சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலையில் "ஊர் கூடி மகிழ்வோம்" என்ற தலைப்பில் விசேட புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை இடம்பெறவுள்ளதுடன், மாலை 5 மணி தொடக்கம் நாடக ஆற்றுகைகளும் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் புத்தகக் கண்காட்சியினைத் தேசிய கலை, இலக்கியப் பேரவையினர் முன்னெடுக்கவுள்ளதுடன், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், பு.கணேசராசா அவர்களின் எழுத்துரு மற்றும் நெறியாள்கையில் "ஆட்டுக்குட்டி" மற்றம் மாவை நித்தியானந்தனின் எழுத்துருவில் "முட்டை" ஆகிய நகைச்சுவை நாடகங்களும், கூத்தாட்டு அவைக்களத்தின் தயாரிப்பில், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் வி.விஜயரூபனின் நெறியாள்கையில் "இடுக்கண் வருங்கால்", வி.விஜயரூபனின் எழுத்துரு, நெறியாள்கையில் "பட்டறிவு" ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறுவுள்ளன. (அ)

# கிளிநொச்சி விபத்தில் முதியவர் பலி

கிளிநொச்சி, ஓக. 07

ஏ-9 வீதியிலுள்ள கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த சுகாதார அமைச்சுக்கு சொந்தமான கப்ரக வாகனம், அப்பகுதியில் உள்ள வீதியை கடக்க முற்பட்டவர் மீது மோதியது.

இதன்போது திருகோணமலை பகுதியை சேர்ந்த 55 வயதான முதியவர் உயிரிழந்தார்.

# தர்மபுரத்தில் கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த பொலிஸ் நடவடிக்கை

கிளிநொச்சி, ஓக. 07

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்று முன் தினம் மாலை சூட்சுமமான முறையில் பயணப் பொதியில் மறைத்து பஸ்ஸில் கசிப்பை எடுத்துச் செல்ல முற்பட்ட சந்தேக நபர்கள் இருவர் புளியம்பொக்கணைப் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேக நபரிடம் இருந்து 30 லீற்றர் கசிப்பும் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைவாக பெரியகுளம் கட்டைக்காட்டு பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் 50 லீற்றர் கசிப்பு, 60 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பனவற்றுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# மன்னார் மக்களை ஏமாற்றினார் அநுர

## செல்வராஜா கஜேந்திரன் குற்றச்சாட்டு

மன்னார், ஓக. 07

ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளராக மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்த அநுரகுமார திஸாநாயக்க தனது உரையில், மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காற்றாலைத் திட்டம் மன்னாரில் நடைமுறைப்படுத்தப்படாது என்ற விடயத்தை கூறி இருந்ததார். ஆனால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் குறித்த திட்டம் அவரை நம்பிய மக்களை ஏமாற்றமடைய வைத்துள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் சுற்றுச் சூழலுக்கும் மக்களது இயல்பு வாழ்க்கைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும் காற்றாலை திட்டத்தை நிறுத்த வலியுறுத்தி மக்களும் சிவில் அமைப்புக்களும் இணைந்து முன்னெடுக்கும் போராட்டம் மன்னார் தள்ளாடிப் பகுதியில் அமைதியாக நடைபெறுகிறது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்வியலையும் இயற்கைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் குறித்த திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கவேண்டாம் என மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் மக்களின் கருத்தை கருத்தில் கொள்ளாது மன்னார் தீவில் 2 ஆம் கட்ட காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் பாரிய காற்றாடிகள் மன்னாரை நோக்கி எடுத்து வரப்பட்டு கொண்டிருக்கும் சூழ்நிலையில், மக்கள் அதனை அறிந்து தற்போது இரவு பகல் பாராது வீதியில் இறங்கி போராடி வருகின்றனர்.

ஏற்கனவே ஒரு சில வருடங்களுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்தபோது மன்னாரின் சில பகுதிகளில் காற்றாலைகள் நிர்மானிக்கப்பட்ட நிலையில் சுற்றுச் சூழலுக்கும் மக்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தது.

அதன் பிற்பாடு அடுத்த கட்டமாக காற்றாலைகள் நிர்மாணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது மக்கள் அதனை முற்றுமுழுதாக எதிர்த்து இருந்தார்கள்.

இந்த நிலையில் தற்போது நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளராக மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்த அநுரகுமார திஸாநாயக்கவிடம் குறித்த பிரச்னை கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர் தனது உரையில் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த காற்றாலைத் திட்டம் மன்னாரில் நடைமுறைப் படுத்தப்படாது என்ற விடையத்தை கூறி இருக்கிறார்.

மன்னார் மாவட்ட மக்கள் அவரது கருத்தில் நம்பிக்கை கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இன்று அவர் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்களை பெற்று ஜனாதிபதியாகவும் இருந்து கொண்டு பாராளுமன்றத்திலும் பெரும்பான்மை இருக்கும் நிலையிலே மன்னாரில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதனை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு மக்களினால் எடுக்கப்படுகின்ற அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்துள்ள நிலையில் மக்களின் விருப்பத்துக்கு மாறாக காற்றாலைகள் எடுத்து வரப்படுகின்றன. மக்கள் வழிமறித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்த போராட்டத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய பேரவை முழுமையான ஆதரவை வழங்கும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
07.08.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஐந்து வருடங்கள் போதாதா?

தற்போதைய அரசியல் சூழலில், எந்தவொரு அதிகாரம்மிக்க அரசியல் பதவிகளில் இல்லாத ஒருவர் மிகவும் செல்வாக்கு மிக்கவராக இருக்கின்றார் என்றால், அது ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மட்டும்தான். "நாட்டை மாற்றியமைப்பதற்கு ஐந்து வருடங்கள் போதாது", என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அவர் கூறுவது ஒருவகையில் உண்மைதான் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக பாரம்பரிய கட்சிகள் இல்லாத ஒரு கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருப்பது இதுதான் முதல் தடவை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ஜே. வி. பியின் அரசியல் திட்டங்களை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமாயின், அவர்களுக்கு அதிக காலம் தேவைதான். ஆனால், செய்யக்கூடிய விடயங்களை தற்போதுள்ள சூழலில் செய்ய முடியும். எனவே, செய்யக் கூடிய விடயங்களை அவர்கள் செய்கிறார்களா என்பதுதான் கேள்வி.

அவர்கள் குறிப்பிடுவது போன்று அடிப்படையான மாற்றங்களை ஐந்து வருடங்களுக்குள் செய்துவிட முடியாது போனாலும்கூட, அவ்வாறான சிறந்த மாற்றங்களுக்கான அடித்தளத்தை ஐந்து வருடங்களுக்குள் ஏற்படுத்தலாம்.

ரில்வின் சில்வா, தாங்கள் தொடர்ந்தும் ஆட்சியிலிருக்க வேண்டிய தேவையையே மறைமுகமாக சுட்டிக்காட்டுகின்றார் அதேவேளை அதற்கான முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதும் உண்மை. அவரே ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருப்பது போன்று, ஜே. வி. பியின் ஒரு சிறிய பகுதிதான் ஆட்சியில் பங்குகொள்கின்றது இன்னொரு பகுதியை எவருக்கும் தெரியாது, அது அதிகாரத்தில் அமராது. ஏனெனில், நாங்கள் ஓர் அரசியல் இயக்கமாவோம். அது உண்மைதான்.

ஆனால், தற்போது இலங்கையின் எதிர்காலத்தை பொறுப்பேற்றிருக்கும் ஒரு கட்சியென்னும் வகையில், இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்னைக்கு சாத்தியமான வழிகளில் தீர்வு ஒன்றைக் காணவேண்டிய மிகப்பெரும் பொறுப்பு ஜே.வி.பிக்கு உண்டு. அதற்கான அரிய பெரும்பான்மை பலமும் ஜே. வி. பியிடம் இருக்கிறது. அதனைக் கொண்டு அவர்கள் பல நல்ல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

ஏனெனில், அடுத்த தடவையும் ஜே. வி. பி. வெற்றி பெறலாம், அதற்கான வாய்ப்புகள் இல்லையென்று கூறிவிட முடியாது. ஏனெனில், எதிரணிகள் மிகவும் பலவீனமாக இருக்கின்றன. ஆனால், இங்குள்ள அடிப்படையான பிரச்னை, அடுத்த தேர்தலில் வெற்றி பெற்றாலும் தற்போதுள்ள பெரும்பான்மை பலத்தை பெறுவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவானது.

இந்த அடிப்படையில் நோக்கினால், கிடைத்திருக்கும் இந்தக் காலத்தில்தான், ஜே. வி. பி. மேற்கொள்ள எண்ணும் அடிப்படையான மாற்றங்களுக்கான அடித்தளத்தை இட வேண்டும். அடுத்த வெற்றியின்போது அதனை அமுல்படுத்தலாம். ஆனால், தற்போது கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பை தவறவிட்டால் அது பேருந்தை தவறவிட்டதான அனுபவத்தையே தரும்.

இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்களும் இதே தவறையே செய்தனர். இதற்கான ஆகப்பிந்திய உதாரணம் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சிக் காலமாகும்.

இந்த அனுபவத்தின் அடிப்படையிலும் இலங்கையின் நிச்சயமற்ற அரசியல் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு சிந்தித்தால், கிடைத்திருக்கும் இந்த வாய்ப்புத்தான் ஜே. வி. பிக்கான அரிய வாய்ப்பாகும்.

# நல்லைக்குமரன் நேற்று வெளியீடு யாழ்.விருது ஆசிரியர் குணசீலனுக்கு



யாழ்ப்பாணம், ஒக. 07

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரின் 33 ஆவது இதழ் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நேற்று காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜாவால் நல்லைக்குமரன் மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அத்துடன் சைவ சமய விவகாரக்குழு வழங்கி கௌரவிக்கின்ற யாழ். விருது இம்முறை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளரும் உயிரியல் பாட ஆசிரியருமான சின்னத்தம்பி குணசீலனுக்கு வழங்கப்பட்டது.

சைவத்திற்கும் தமிழுக்கும் சமூகத்துக்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து இந்த "யாழ். விருது" வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கை.சிவகரன், வீணாகான குரு பீட பீடாதிபதி சிவசிறீ சபா வாசுதேவக் குருக்கள், துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் சாதனைத்தமிழன் ஆறு. திருமுருகன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கோசலை மதன், மாநகர சபை சைவ சமய விவகார குழு உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

# முல்லைத்தீவு உணவகங்களில் நேற்றுத் திடீர்ப் பரிசோதனை

முல்லைத்தீவு, ஒக. 07

முல்லைத்தீவு மாங்குளம் பொது சுகாதார பிரிவில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வணிகங்களில் நேற்று பொது சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட, மாங்குளம் பொது சுகாதார பிரிவில் உள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் வணிகங்களில் பரிசோதனை இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரிகளான பகீரதன் மற்றும் சஞ்சீவன் ஆகியோர்களின் வழிகாட்டலில், மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் நதிருசன் தலைமையில், ஒட்டுசுட்டான் பொதுச் சுகாதார பரிசோதகர் டிலக்சன் மற்றும் முத்தையன்கட்டு பொது சுகாதார பரிசோதகர் லோஜிதன் ஆகியோர் இணைந்து, மாங்குளம் பகுதிகளில், சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன் போது, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன், சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. (அ)

# விழிப்புணர்வு நடைபயணம்


கிளிநொச்சி, ஒக. 07

சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நடைபயணம் நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில் நேற்று காலை கிளிநொச்சி மாவட்டத்திலும் விழிப்புணர்வு நடைபயணம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியிலிருந்து கனகபுரம் விளையாட்டு மைதானம் வரை முன்னெடுக்கப்பட்ட நடைபயணத்தில் இளைஞர் சேவை அதிகாரிகள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 07 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 22
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : திரியோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். மரியாதைக் கூடும். மனசாட்சிபடி செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்துவைக்க முடியவில்லை என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். மறதியால் பிரச்னை வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார். நன்மை நடக்கும்.

**கடகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளின் பெருமைகளை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**துலாம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உங்களின் கருத்துக்கு ஆதரவு பெருகும்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். அதிரடியான மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பு குறையும். உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மகரம்**
மறைமுக விமர்சனங்களும் எதிர்காலம் பற்றிய பயம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சி களில் கலந்து கொள்வீர்கள். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வியாபாரத்தில் கடமை உணர்வுடன் செயல்பட தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.


**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 07

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அதன் ஊடாக கிடைத்த பெறுபேறுகள் மற்றும் பாடசாலையை வளர்ச்சிப் பாதையை நோக்கிக் கொண்டு செல்வதற்காக எடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள் தொடர்பில் அதிபரால் ஆளுநருக்கு



விளக்கமளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வளங்களை, மாகாணப் பாடசாலைகளுடன் பகிர்ந்து எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தார். (அ)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று..!

யாழ்ப்பாணம், ஓக. 07

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 6.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழு இசை நிகழ்ச்சியில் ஆலாபனா இசை மன்ற மாணவர்களின் பாட்டு இடம்பெறும். இதில், வயலின் - இராசரத்தினம் நிறோசன், மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன் அணி செய்வர்.

தொடர்ந்து வயலினிசையில் வயலின் - கலாநிதி திருமகல் சே. தினேஷ்குமார், மிருதங்கம் - கே. பிரணவாகரன், கடம் - குமாரசாமி ரவிசங்கர் இசை விருந்தளிப்பர்.

(ஐ)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 07

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் தெய்வீக கலை அர்ச்சனை நிகழ்வை நடத்தி வருகிறது.

இதில், இன்று முற்பகல் 10 மணிக்கு நயினை பொன். கேசன், பன்னாலை பெரியதம்பிரான் பஜனை குழுக்களின் பஜனையும் நுண்கலைமாணி செல்வி. கஜப்பிரியா சிவபாலசுப்பிரமணியம் வழங்கும் வீணை இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது.

(ஐ)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 07

நல்லூர் திருவிழாவை ஒட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தெய்வீக திருக்கூட்டத் தொடரின் பத்தாம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வேதாந்த மடம், சிறீ சிவகுருநாத பீட 8ஆவது குருபீடாதிபதி வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, ஊரெழு, மீனாட்சி அம்மன் ஆலய பிரதம குரு சிவசிறீ கிருஷ்ண. சோதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில், நெடுந்தீவு பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா கேதீசன் பிரதம அதிதியாகவும் உடுவில் பிரதேச செயலக கணக்காளர் திருமதி சத்தியரூபன் மீரா சிறப்பு அதிதியாகவும் தேசிய கல்வியியல் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளர் திருமதி சிவை குகநேசன், யாழ். இராமநாதன் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ண பிள்ளை, ஓய்வுநிலை ஆசிரியர், பண்டிதர் திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பங்கேற்பர்.

கலை நிகழ்ச்சிகளை இணுவில் ஸ்ரீ பரராஜசேகர பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர். வரவேற்புரையை இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்ப்பாணம், நாவலர் கலாசார மண்டப அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஜீவிதா ஆனந்தராசா வழங்குவார்.

சிறப்பு கலை நிகழ்வாக, செல்வி தேவசேனா விஜயகுமார சர்மாவின் வீணை இசை நிகழ்வும் லாஸ்யமதி கலை மன்ற மாணவர்கள் வழங்கும் நடன நிகழ்வும் நடைபெறவுள்ளன.

மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வை தொடர்ந்து நன்றி உரையை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறி பாடசாலை ஆசிரியர் கு. அனுசன் வழங்குவார்.

(ஐ)

# ‘சின்னஞ்சிறு கிளியே’ சிறுவர் பாடல் இறுவட்டு யாழில் வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 07

சித்ரஷேய்திரா கலைக்கூடத்தின் “சின்னஞ்சிறு கிளியே” சிறுவர் பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் நாச்சிமார் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

லயஞானி நல்லை க. கண்ணதாஸின் கவி வரிகளில் இசையமைப்பாளர் தேனிசையாளன் சிறீ குகனின் இசையில் அமைந்த 10 பாடல்களின் தொகுப்பாக இந்த இறுவெட்டு வெளியாகியிருந்தது.

இறுவட்டில் இடம்பெற்ற பாடல்களை சித்ரஷேய்திரா கலைக்கூடத்தின் இயக்குநர் திருமதி சித்திரா ஹவிக்குமாரும் அவருடை மாணவர்களும் பாடியிருந்தனர்.



வெளியீட்டு நிகழ்வுக்கு ஊடகவியலாளர் இளங்கீரன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடக்கு மாகாண பொது முகாமையாளர் வ. சிவானந்தன், சிறப்பு விருந்தினர்களாக,

கலாபூசணம் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன், வடக்கு மாகாண ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.இரவீந்திரன், மிருதங்க ஆசான் சங்கீதரத்தினம் மா. சிதம்பரநாதன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வி. பி. எஸ். டி பத்திரண பங்குகொண்டார்.

இறுவட்டு வெளியீட்டைத் தொடர்ந்து இசையரங்கும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பெருமளவிலானோர் பங்கேற்றனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமரத்ன ராஜபக்ஷவை சர்வதேச விசாரணைக்கு தயார்ப்படுத்துங்கள்!

## சபையில் கோரினார் சிறீதரன் எம்.பி.

கொழும்பு, ஓக. 07

**“தேசபந்து தென்னக்கோன் விவகாரத்தில் மட்டுமல்ல தமிழினப் படுகொலைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட இன வழிப்புகளுக்கும் நீதி விசாரணை வேண்டும். எனவே, இந்த செம்மணி விவகாரத்தில் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை சர்வதேச விசாரணைக்கு தயார்ப்படுத்த வேண்டும்.” என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய சிறிதரன் எம்.பி.-

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது மிகப்பெரும் அநீதிக்கு எதிரானது. மக்கள் பட்ட துயரங்கள், அனுபவித்த சித்திரவதைகள், நடந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களோடு சம்பந்தப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரானது என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதனை வரவேற்கின்றோம்: ஆதரிக்கின்றோம்.

ஏனெனில் நாமும் இதே துன்பங்களை, சித்திரவதைகளை சந்தித்த ஒரு இனம் என்ற வகையிலும் தொடர்ச்சியாக இந்த நாட்டிலே பல்வேறுபட்ட பொலிஸ் அராஜகங்களுக்கும் , இராணுவ அராஜகங்களுக்கும் முகம் கொடுத்து இன்றுவரை வாழ்கின்ற இனம் என்ற அடிப்படையில் இந்த பிரேரணைக்கு ஆதரவளிக்கின்றோம்.

செம்மணியில் தமிழர்களுடைய எலும்புக்கூட்டுத்தொகுதிகள் வெளிவரக்காரணமாக உள்ள கொலையாளிகள் யார் ? இக்கொலைகளை யார் செய்தார்கள்? தேசபந்து தென்னகோனுக்கு எதிராக நீங்கள் கொண்டுவரவுள்ள நீதியை தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கொண்டுவர தயார் இல்லை. அந்த தெளிவான மனநிலை உங்களிடம் இல்லை. இதில் ஒரு சர்வதேச மேற்பார்வையை கொண்டுவாருங்கள் என்று கேட்டால் கூட அரசு அதில் தெளிவில்லாத நிலையில் உள் ளது.

சர்வதேச விசாரணைக்கு சாட்சியமளிக்க தயார் என கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்துள்ளார். எனவே, இந்த செம்மணி விவகாரத்தில் சோமரத்ன ராஜபக்சவை நீங்கள் சர்வதேச விசாரணைக்கு தயார்ப்படுத்துங்கள். உண்மைகள் வெளியே வரட்டும்-என்றார். (அ)

## போதைப்பொருள் குற்றச்சாட்டு; 90 பொலிஸ் அதிகாரிகள் நீக்கம்

கொழும்பு, ஓக. 07

போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளும் சுமார் 90 பொலிஸ் அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வுட்லர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸ்துறை தெரிவித்துள்ளது. (அ)

## 6 மாதங்களில் அரசின் வருமான-செலவு இடைவெளி 32.3 வீதமாகக் குறைவடைவு

கொழும்பு, ஓக. 07

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் அரசாங்கத்தின் வருவாய்-செலவு இடைவெளி 32.3 வீதம் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது.

இது தற்போதைய அரசாங்கம் பொருளாதாரத்தை நிலைப்படுத்தும் பாதையில் செல்கிறது என்பதற்கான அறிகுறி என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்க வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளி குறைவதற்கான காரணம், மானியங்கள் உட்பட அரசாங்க வருவாய் 24.7 வீதம் அதிகரித்து 2.3 டிரில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், அரசாங்க வருவாய் 1.8 டிரில்லியன் ரூபாவா பதிவாகியிருந்துது.

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வருமான வரி வருவாய் முந்தைய ஆண்டை விட 447 பில்லியன் ரூபாவில் இருந்து 489 பில்லியன் ரூபாவாக 9.2 வீதம் அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில் வற் வருவாய் 645 பில்லியன் ரூபாவில் இருந்து 876 பில்லியன் ரூபாவாக 27.6 வீதம் அதிகரித்துள்ளது.

வாகன இறக்குமதியிலிருந்து வரும் வரி வருவாய் முந்தைய ஆண்டை விட 335.6 வீதம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வருவாய் 129.1 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இடிந்து வீழ்ந்த மண்மேடு ஐவர் காயங்களுடன் மீட்பு

கொழும்பு, ஓக. 07

மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதியில் பனியன் பாலத்திற்கு அருகில் மண்மேடொன்று வீடொன்றின் மீது இடிந்து வீழ்ந்துள்ளது.

இதன் போது மண்மேட்டில் ஐவர் புதையுண்டதாக மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்தனர்.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்மேட்டில் புதையுண்ட ஐவரும் பிரதேச மக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## 733 பேர் கைது!

கொழும்பு, ஓக. 07

நாடளாவிய ரீதியில் நேற்று முன் தினம் பொலிஸாரால் நடத்தப்பட்ட விஷேட சுற்றிவளைப் பின்போது குற்றச் செயல்களில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் 23,856 பேர் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 17 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 212 சந்தேக நபர்கள் இந்த சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுபானம் அருந்திய நிலையில் வாகனம் செலுத்திய 101 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் முறையற்ற விதத்தில் வாகனங்களை செலுத்திய 18 பேர் உட்பட போக்குவரத்து விதிகளை மீறிய 3,335 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## முற்றாக எரிந்த கார்!

கொழும்பு, ஓக. 07

பத்தரமுல்லையில் உள்ள அக்குரேகொட வேவ வீதியில் நேற்று காலை ஏற்பட்ட விபத்தில் கார் ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாரதியால் காரின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அது வீதியிலிருந்த ஒரு கம்பத்தில் மோதி தீப்பிடித்து எரிந்துள்ளது.

விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இலங்கைக்கான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் ஆர்கியா எயார்லைன்ஸ்!

கொழும்பு, ஓக. 07

எதிர்வரும் செப்ரெம்பர் முதல் இஸ்ரேலின் ஆர்கியா எயார்லைன்ஸ் இலங்கைக்கான விமான சேவையை மீண்டும் தொடங்க திட்டமிட்டுள்ளது.

இறுதியாக 2024 மே மாதம் ஆர்கியா எயார்லைன்ஸ் இலங்கைக்கான சேவை தொடர்ந்தது.

இந்த நிலையில் 2025 செப்ரெம்பர் 23, 25 அன்று சேவை மீண்டும் தொடங்கியவுடன், டெல் அவிவ் - கொழும்பு வழித்தடம் விமான நிறுவனத்தின் குல்லிவேர் எயார்பஸ் ஏ 330-200 விமானத்தின் மூலமாக இணைக்கப்படும். (அ)

## ஒருவரை சுட்டுக் கொன்ற வழக்கு; இரண்டு பேருக்கு மரண தண்டனை

கொழும்பு, ஓக. 07

லக்கல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தர்மசிறி கங்கனங்கரவின் மகனை சுட்டுக் கொன்றதுடன் அவருடன் இருந்த மற்றொருவரை சுட்டுக் காயப்படுத்திய வழக்கில் இரண்டு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை மேல் நீதிமன்ற நீதிபதி ரவீந்திர பிரேமரத்ன நேற்று குறித்த உத்தரவைப் பிறப்பித்தார்.

லக்கல, கோனவெலவைச் சேர்ந்த ஏகநாயக்க முதியன்சலாகே துசித தசநாயக்க மற்றும் கொஸ்கஹஹேனைச் சேர்ந்த கெதர சமரசூரிய ஆகியோருக்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## வத்தளை படுகொலை; மூவர் கைது!

கொழும்பு, ஓக. 07

வத்தளை, ஹேக்கித்த, அல்விஸ்வத்த பகுதியில் நடந்த கொலை சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் முகத்துவாரம் மற்றும் வத்தளை பகுதிகளில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொலை செய்ததற்காக இரண்டு சந்தேக நபர்களும், கொலைக்கு உதவியதற்காக ஒரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 17, 25 மற்றும் 27 வயதான கொழும்பு 15 மற்றும் வத்தளை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு கைப்பேசிகளை பொலிஸார் கையகப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி, வத்தளை, ஹேக்கித்த, அல்விஸ்வத்த பகுதியில் கூரிய ஆயுதங்களால் தாக்கி ஒருவர் கொல்லப்பட்டார். (அ)

## வெடிபொருட்களுடன் முதியவர் கைது!

கொழும்பு, ஓக. 07

இரத்தினபுரியில் இறக்குவானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மெதகங்கொட பிரதேசத்தில் வெடிப்பொருட்களுடன் முதியவர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இறக்குவானை பகுதியில் வசிக்கும் 78 வயதுடைய முதியவர் ஆவார்.

சந்தேக நபரான முதியவரிடமிருந்து 02 கிலோ 888 கிராம் கோடையிட் , 09 கிலோ 597 கிராம் அமோனியம் , 15 வோட்டர் ஜெல் குச்சிகள், டெட்டனேட்டர் 25 மற்றும் வெடிமருந்து நூல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

## நாடு முழுவதும் குற்றங்களை கட்டுப்படுத்த சிறப்பு திட்டம்

கொழும்பு, ஓக. 07

நாடு முழுவதும் நிகழும் குற்றங்கள் மற்றும் கொலைகளை கட்டுப்படுத்த சிறப்பு திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

குருநாகலில் உள்ள வெஹெர பொலிஸ் வளாகத்தில் வடமேற்கு மாகாண குற்றப்பிரிவைத் திறந்து வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மெலும் தெரிவிக்கையில்-

நாடு முழுவதும் நிகழும் குற்றங்கள் மற்றும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன. அதைத் தீர்க்க முப்படையினரும் பொலிஸாரும் இணைந்து ஒரு சிறப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

ஊடகங்கள் இதை வெளியிடும் நிலையில் இல்லை. தற்போது, நாடு முழுவதும் பதினைந்து குழுக்கள் இயங்கி வருகின்றன. கூடுதலாக, ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் ஒரு குழு செயல்பட்டு வருகிறது.

சில பாதாள உலகத் தலைவர்களிடையே கொலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த மனிதக் கொலைகளை அரசாங்கம் புறக்கணிக்காது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி குறைப்புக்காக ஏற்கப்பட்ட அமெரிக்க நிபந்தனைகள் எவை?

## கேள்வி எழுப்புகின்றார் வீரவன்ஸ

கொழும்பு, ஓக. 07

**"வரியை குறைத்துக்கொள்வதற்காக அமெரிக்காவின் எவ்வாறான நிபந்தனைகள் ஏற்கப்பட்டன என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்." - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தினார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு ஆரம்பத்தில் 44 சதவீத வரி விதிக்கப்பட்டது. பின்னர் அது 30 ஆக குறைக்கப்பட்டது. இறுதியில் 20 சதவீதமாக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களுக்கு வர வேண்டும் என அமெரிக்க தரப்பில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. எனவே, இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள நிபந்தனைகள் எவை? சோபா ஒப்பந்தத்தக்குரிய இணக்கம் ஏற்பட்டுள்ளதா? சோபா ஒப்பந்தம் ஏற்கப்பட்டால் அமெரிக்க படைகள் நாட்டுக்குள் வர முடியும். ஆகவே, பாதுகாப்பு நிபந்தனைகள் ஏற்கப்பட்டனவா? இது பற்றி எமக்கு தெரியாது. ஏற்கப்பட்டிருந்தால் அவை எவை என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஏழு ஒப்பந்தங்கள் கூட இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. எனவே, அமெரிக்காவுடன் ஏற்கப்பட்ட நிபந்தனைகளை இந்த அரசாங்கம் வெளிப்படுத்தும் என்பதை நம்ப முடியாது-என்றார். (அ)

# கால்வாயில் தவறி விழுந்து 8 வயது சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 07

பொலனறுவை, வெலிகந்தை - நாகஸ்தென்ன பகுதியில், நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை ஆடுகளை மேய்க்கச் சென்ற 8 வயது சிறுவன் கால்வாயில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

வீட்டிலிருந்து ஆடுகளைப் பார்க்கப் போகிறேன் என தாயிடம் கூறிவிட்டு சென்ற சிறுவன், வெலிகந்தை பகுதியில் உள்ள கால்வாயில் தவறி விழுந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த துயர சம்பவம் தொடர்பாக வெலிகந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பாகற் காய்களைத் தாக்கும் புதியதொரு வைரஸ் தொற்று

கொழும்பு, ஓக. 07

பாகற்காய்களை புதியதொரு வைரஸ் தாக்கி வருவதாகவும் இதனால் தமது பயிர்ச்செய்கை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாகற்காய் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த வைரஸ் தாக்கத்துக்கு மருந்துகளைப் பயன்படுத்தினாலும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், இந்த வைரஸ் தாக்கத்திற்கான உரிய மருந்து இதுவரையிலும் கண்டறியப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# வாழ வழியில்லையெனில் முதியோர் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்கலாம்!

## எம்.பிக்களுக்கு கூறுகிறது அரசு

கொழும்பு, ஓக. 07

"ஓய்வூதியம் இன்றி தமக்கு வாழ்வதற்கு வழியில்லையெனில் வாழ்வாதாரக் கொடுப்பனவு கோரி பிரதேச செயலாளர் ஊடாக முன்னாள் எம்.பிக்கள் விண்ணப்பம் தாக்கல் செய்ய முடியும்." - என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

வாழ்வதற்கு கஷ்டப்படும் மக்கள் தொடர்பில் பிரதேச செயலகம் ஊடாக தற்போது அனைத்து பகுதிகளிலும் ஆராயப்பட்டுவருகின்றது. அரச அதிகாரிகள் இதற்குரிய பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, வாழ்வதற்கு வழியில்லையெனில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் விணப்பங்களை தாக்கல் செய்ய முடியும்.

அஸ்வெசும, சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு, முதியோர்களுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட கொடுப்பனவுகள் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றன. எனவே, முன்னாள் எம்.பிக்கள் விண்ணப்பங்களை தாக்கல் செய்தால் அது தொடர்பில் அரசாங்கம் பரிசீலிக்கும்- என்றார். (அ)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை; மேலதிக வகுப்புகளுக்குத் தடை

கொழும்பு, ஓக. 07

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை கருத்திற் கொண்டு நேற்று நள்ளிரவு முதல் பரீட்சை முடியும் வரை மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் பிற பட்டறைகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் 2025 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மாதிரி வினாத்தாள்களை அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கும் மேலதிகமாக, பரீட்சை தொடர்பான கேள்விகள் அல்லது அதுபோன்ற உள்ளடக்கம் மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று பரிந்துரைக்கும் சுவரொட்டிகள், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள் அல்லது விளம்பரங்களை ஒன்லைன் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் வெளியிடுவது மற்றும் விநியோகிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை மீறும் எந்தவொரு தனிநபர், நிறுவனம் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பாக பொது மக்கள் பொலிஸ் (119) அல்லது பரீட்சை திணைக்களத்தின் (1911) துரித இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

அல்லது 0112 784208, 0112 784537 என்ற எண்கள் மூலமும் முறையிடலாம் என்று என்று திணைக்களம் மேலும் வலியுறுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் 10 ஆம் திகதி நாடு முழுவதும் 2,787 பரீட்சை நிலையங்களில் நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசபந்துவை பதவி நீக்கும் தீர்மானம் ஜனாதிபதிக்கு!

கொழும்பு, ஓக. 07

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மாஅதிபர் பதவியிலிருந்து நீக்கும் தீர்மானம் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு அறிவித்துள்ளார்.

இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டமை குறித்து நேற்று ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹன தீர தெரிவித்துள்ளார்.

அதன்படி, புதிய பொலிஸ் மாஅதிபரின் பெயர் அரசியலமைப்புச் சபையால் பெறப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு சபை இன்று பிற்பகல் 3 மணிக்குக் கூட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் 37ஆவது பொலிஸ் மாஅதிபராக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய அல்லது சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் லலித் பத்திநாயக்க நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 133,678 புதிய வாகனங்கள் ஜனவரி மாதம் முதல் பதிவு

கொழும்பு, ஓக. 07

ஜனவரி முதல் இலங்கையில் மொத்தம் 133,678 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, புதிய பதிவுகளில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள்கள் ஆகும்.

2025 ஆம் ஆண்டில் இது வரை மொத்தம் 100,451 புதிய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் குறிப்பிட்டார்.

ஜனவரி முதல் 20,535 கார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மீதமுள்ள பதிவுகளில் இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், லொறிகள் மற்றும் முச்சக்கர வண்டிகள் அடங்கும். (அ)

# வேலைநிறுத்தத்துக்கு தயாராகும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 07

மருத்துவர்களின் இடமாற்றங்களை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு முடிவு செய்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஒகஸ்ட் 11 ஆம் திகதி காலை 8:00 மணிக்குள் தங்கள் பிரச்னைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படாவிட்டால், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் நாடு முழுவதும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று சங்கத்தின் உதவிச் செயலாளர் கலாநிதி ஹன்சமல் வீரசூரிய தெரிவித்தார்.

அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்க சுகாதார அமைச்சுக்கு போதுமான நேரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# தெற்காசிய பிராந்தியத்தில் சிறிய மீன் வளர்ப்பாளர்களை வலுவூட்டும் திட்டம்

கொழும்பு, ஓக. 07

தெற்காசியப் பிராந்தியத்தில் சிறிய மீன் வளர்ப்பாளர்களை வலுவூட்டுவதையும், போஷாக்குப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்ட பிராந்திய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

[illegible] நிறுவனங்களுடன் இணைந்து இந்த திட்டம் கொழும்பில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 3.97 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் ஊடாக பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலுள்ள 120000 இற்கும் அதிகமான கிராமியக் குடும்பங்கள் பயனடையவுள்ளன.

இதன்படி, இலங்கையில் சுமார் 11,000 கிராமிய மீன் வளர்ப்பு குடும்பங்கள் நேரடியாகப் பயனடையவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகை பழி வாங்கும் நோக்கிலேயே நீக்கம்!

## மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 07

**தற்போதைய அரசாங்கம் பழிவாங்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்குவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ-

மக்கள் எங்களுக்கு வழங்கிய சலுகைகளை விட பெரியது எதுவும் இல்லை. அது எங்களிடம் இருக்கும் வரை, எந்தவொரு சலுகையையும் நீக்குவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை-என்றார்.

கேள்வி - இது நடந்தால், நீங்கள் விஜேராமவை விட்டு



வெளியேறி மெதமுலனவுக்குச் செல்ல வேண்டுமா?

பதில் - "மெதமுலன விஜேராமவை விட மிகச் சிறந்தது."

கேள்வி - உங்கள் கருத்துப்படி, அரசாங்கம் எந்த நோக்கத்திற்காக இதுபோன்ற செயலைச் செய்கிறது?

"பழிவாங்க..." என்றார். (அ)

# 120 வெளிநாட்டவர்களுக்கு தற்காலிக சாரதி அனுமதி!

கொழும்பு, 07

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் புதிதாக நிறுவப்பட்ட சேவை கருமபீடம் ஓகஸ்ட் 3 ஆம் திகதி தொடங்கப்பட்டதிலிருந்து மொத்தம் 120 வெளிநாட்டினருக்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும், வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்தைக் குறைக்கவும் இந்த முயற்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

24 மணி நேரமும் செயல்படும் சேவை நிலையம், தகுதியுள்ள வெளிநாட்டினரின் விஸாக்களின் செல்லுபடியாகும் காலம் மற்றும் ஏற்கனவே உள்ள சாரதி அனுமதிப் பத்திங்களின் அடிப்படையில் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்கி உதவுகிறது.

தற்காலிக அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் இரண்டு முதல் ஐந்து மாதங்கள் வரை இருக்கும் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் கமல் அமரசிங்க குறிப்பிட்டார்.

இருப்பினும், கனரக வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான உரிமங்கள் இந்த சேவையின் மூலம் வழங்கப்படாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

(அ)

# தனி அறைக்குள் பரீட்சையை எழுதிய நாமல் சட்ட ஏற்பாடுகளை தெளிவாக கற்கவேண்டும்

## அமைச்சர் சுனில் வட்டகல



கொழும்பு, ஓக. 07

தந்தைக்கும், சித்தப்பாவுக்கும் ஏற்றாற்போல் தீர்ப்பளிக்காத காரணத்தால் முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க சட்டவிரோதமான முறையில் பதவி நீக்கப்பட்டதை நாமல் ராஜபக்ஷ அறியாமல் இருப்பது வேடிக்கையாகவுள்ளது. தனியறையில் இருந்து சட்டக்கல்லூரி இறுதி பரீட்சையை எழுதிய நாமல் ராஜபக்ஷ முதலில் சட்ட ஏற்பாடுகளை தெளிவாக கற்றுக்கொள்ள வேண்டும் அதன் பின்னர் சட்ட ரீதியிலான தர்க்கங்களை முன்வைக்க வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துர்நடத்தை குற்றவாளியான பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்குவதற்கு 2002 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அது சட்டவிரோதமானது, பாராளுமன்ற நிலையியல் கட்டளை மீறப்பட்டுள்ளது என்று நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகிறார்.

தந்தை மற்றும் சித்தப்பாவுக்கு ஏற்றாற்போல் தீர்ப்பளிக்காத காரணத்தால் முன்னாள் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க சட்டவிரோதமான முறையில் பதவி நீக்கப்பட்டதை நாமல் அறியாமலிருப்பது வேடிக்கையாகவுள்ளது. ராஜபக்ஷர்கள் எவ்வாறு சட்டத்தை செயற்படுத்தினார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

சட்டவிரோதமான முறையில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பான விவாதம் நடத்தப்படுவதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிடுகிறார். தேசபந்து தென்னக்கோனின் துர்நடத்தை தொடர்பில் தான் 2002 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றும் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விடயத்தை பாராளுமன்றத்தில் விவாதிப்பதால் நீதிமன்ற விசாரணைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று சிறப்புக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

தனியறையில் இருந்து சட்டக் கல்லூரி இறுதி பரீட்சையை எழுதிய நாமல் முதலில் சட்ட ஏற்பாடுகளை தெளிவாக கற்றுக்கொள்ள வேண்டும் அதன் பின்னர் சட்ட ரீதியிலான தர்க்கங்களை முன்வைக்க வேண்டும்- என்றார். (அ)

# அரச சேவையை நவீன கலாசாரத்துக்கு இட்டுச்செல்ல சகலரும் ஒன்றுபடுவோம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 07

பௌதீக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் சிதைந்துபோன அரச கட்டமைப்பு தொடர்பில் சுயவிமர்சனம் செய்து, நவீன அரச சேவையை உருவாக்க அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரச சேவையை நவீனத்துவ கலாச்சாரத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும், அதைப் பாதுகாக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார மேலும் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், அதன் பௌதீக வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் சிதைந்துபோன அரச சேவையை நவீனமயமாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 41 ஆவது வருடாந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 41 ஆவது வருடாந்த மாநாடு ஜனாதிபதி அநுகுமார திசாநாயக்க தலைமையில், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி சந்தன அபே



ரத்ன ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

அரச சேவையை வலுப்படுத்தும் வகையில், கடந்த வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட சம்பள உயர்வு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு அடுத்த ஆண்டு சம்பள உயர்வு வழங்குவதற்காக ரூ. 11,000 மில்லியன் ஒதுக்கப்படும் என்றும், 2027 ஆம் ஆண்டுக்கான அரசு ஊழியர்களின் சம்பள உயர்வுக்காக ரூ. 11,000 மில்லியன் ஒதுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி விளக்கினார்.

கவர்ச்சிகரமான அரச சேவையை உருவாக்குவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாகவும், இதற்காக அரச நிர்வாக அதிகாரிகளின் அர்ப்பணிப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு அரச சேவையிலுள்ள சிறுகுழுவினால் கொடுக்கல் வாங்கலாக மாற்றப்பட்டுள்ளது என்றும், சமூக விழுமியங்களை விட நிதி மதிப்புகளுக்கு முன்னுரிமை அளித்த அரச சேவை அந்த சூழ்நிலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

குடிமக்கள் மீதான அரச அதிகாரிகளின் பொறுப்பை சுற்றறிக்கைகள் அல்லது கட்டளைகளால் கட்டுப்படுத்த முடியாது என்றும், சமூக மதிப்புகள் மற்றும் சமூக விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அதிகாரிகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூறிய ஜனாதிபதி, தமக்குக் கிடைத்த பொறுப்பை மற்றவர்களை ஒடுக்குவதற்குப் பயன்படுத்தாமல், சிறந்த அரச சேவையை கட்டியெழுப்புவதற்கும், மக்களுக்கு உயர்தர வாழ்க்கையை வழங்குவதற்கும் பயன்படுத்துவது அரசு அதிகாரிகளின் பொறுப்பாகும் என்று சுட்டிக்காட்டினார்.

அரச சேவை இன்று ஒரு முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது என்றும், நேரம் எடுத்து தொடர்ந்து முன்னேற முடியும் என்றும், இல்லையெனில், நமது பங்கை சுயமதிப்பீடு செய்து, குடிமக்களின் தேவைகளின் அடிப்படையில் திறமையான சேவையை வழங்குவதற்கான பாதையைத் தேர்வு செய்ய வேண்டிய காலம் கனிந்துள்ளது என்றும் ஜனாதிபதி அநுரகுமார கூறினார்.

புதிய மாற்றத்திற்குத் தேவையான புதிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், குடிமக்கள் விரும்பும் நாட்டை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சிதைவடைந்த அரசை மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# அறுகம்குடா, வெலிகமவில் இஸ்ரேலியர்களின் வணிகங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 07

அறுகம்குடா மற்றும் வெலிகம உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேலியர்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டவர்களால் சட்டவிரோதமாக நடத்தப்பட்டுவரும் வணிகங்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்தம் ஒருமுறை இஸ்ரேலியர்கள் கூடும் இடத்துக்கு அவ்வேளையில் பாதுகாப்பு வழங்கப்படுவதற்குக் காரணம் சுற்றுலாப்பயணிகளுக்கு உரிய பாதுகாப்பை அளிக்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு இருப்பதனாலேயே தவிர, வேறெந்த விசேட பாதுகாப்பும் வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை மேற்குறிப்பிட்டவாறு சுற்றுலாப்பயணிகளாக நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களால் இலங்கையின் உரிய அனுமதிபெறாமல், சட்டவிரோதமான முறையில் நடத்தப்பட்டுவரும் வணிகங்கள் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

அத்தோடு இலங்கைக்கு வருகை தரும் இஸ்ரேலிய விமானங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் தீர்மானம் கடந்த 2023 ஆம் ஆண்டு கடந்த அரசாங்கத்தில் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான குழுவினராலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும், அத்தீர்மானமே தற்போது நடைமுறைப்படுத் தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7இல் ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்படும் அபாயநிலை

## மட்டக்களப்பிலேயே இந்த நிலைமை

மட்டக்களப்பு, ஒக. 07

**மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு பேரில் ஒருவர் என்ற ரீதியில் புற்றுநோய் உருவாகி வருகிறது. இது ஒரு சமுதாய பிரச்னையாக இருக்கிறது என்று மருத்துவரும் புற்றுநோய் தடுப்பு சங்க தலைவருமான கருணாகரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பில் வாய் புற்று நோயை தடுக்கும் திட்டத்தின் கீழ் பேருந்து சாரதிகள், நடத் துநர்களை பரிசோதனை செய் யும் நடமாடும் மருத்துவ முகாம் மட்டக்களப்பு சுகாதர சேவை கள் பணிமனையின் பணிப்பா ளர் முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்விலேயே மருத் துவர் கருணாகரன் மேற்கண்ட வாறு கூறினார்.

மேலும், "மாவட்டத்தில் வாகன சாரதிகள், நடத்துநர்கள் வெற்றிலை, பாக்கு புகையிலை, புகைத்தல் போன்றவற்றுக்கு அடிமையாகியுள்ளனர். அவை இல்லாமல் தமது தொழிலை செய்ய முடியாது உள்ளனர். இது எந்தளவுக்கு வாய் புற்று நோயை கொண்டுவரும் என் பது எங்களுக்கு தெரியும் இது பெரும் சமுதாய பிரச்னையாக இருக்கிறது.

எனவே, வாகன சாரதிகள், நடத்துநர்களை முதலில் பரி சோதித்து புற்றுநோயை இனங் கண்டு வெற்றிலை, பாக்கு, புகையிலை , புகைத்தல்களை பாவிப்பதால் ஏற்படும் புற்று நோய் தொடர்பாக அவர்க ளுக்கு தெளிவூட்டப்பட்டது.

வெற்றிலை, பாக்கு புகை யிலை, பாவிப்பவர்கள் அதிக ரித்துள்ளது.

இதனால் அவர்க ளுக்கு வாய் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள் ளன. இதனால் வாழ்க்கையே கேள்விக்குறியாகும் நிலை ஏற் பட்டுள்ளது. இதனை ஒவ்வொ ருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# திராய்க்கேணி படுகொலை 35ஆம் ஆண்டு நினைவேந்தல்



காரைதீவு, ஒக. 07

திராய்க்கேணியில் 54 அப் பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் 35ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

1990 ஒகஸ்ட் 6ஆம் திகதி அம்பாறை - திராய்க்கேணியை சுற்றிவளைத்த இராணுவம், முஸ்லிம் ஊர்காவல் படைகள் கோயிலில் தஞ்சமடைந்திருந்த மக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர்.

இதன் 35ஆவது ஆண்டு நினைவேந்தலே நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ)

# மட்டு. மாநகரில் வரி நிலுவையை அறவிடும் செயல் திட்டம் ஆரம்பம்!



மட்டக்களப்பு, ஒக. 07

மட்டக்களப்பு மாநகர சபையினால் கடந்த வருட வரி நிலுவைகளை அறவிடும் பணி கள் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கிய நாதன் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

கடந்த வருடங்களில் மாந கர சபையின் 20 வட்டாரங்க ளில் செலுத்த வேண்டிய வரிப் பணம் 9 கோடி ரூபாய் நிலுவை உள்ளதனால் அவற்றை மாநகர சபை உத்தியோகத்தர்கள் ஐந்து குழுவாக பிரித்து அறவிடுகின் றனர்.

மேலும் கடந்த வருடங்க ளான 2022, 2023, 2024 ஆண் டுகளில் மட்டும் 62 மில்லியன் நிலுவை அறவிடாது காணப் படுகின்றமை குறிப்பிடத்தக் கது.

மக்களின் வசதிகருதி மக்கள் வீடுகளுக்கு சென்று நிலுவை களை அறவிடும் பணி மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போது மாநகர சபை யால் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்கள், திண்மக்கழிவு முகாமைத்துவம், வீதி அமைத்தல், மின் விளக்குகளை பொருத்துதல், பாதிக்கப்பட்ட வீதிகளை செப்பனிடுதல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

மேலும், மாநகரசபை எல் லைப் பகுதிக்குள் கட்டாக் காலி மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல், வீதி யோர வியாபாரத்தை தடை செய்தல் போன்ற நடவடிக்கை களும் முன்னெடுக்கப்படுகின் றன. (ஐ)

# சமஷ்டி அதிகாரத்தை கோரி கல்முனையிலும் போராட்டம்



கல்முனை, ஒக. 07

சமஷ்டி கோரிக்கையை வலியுறுத்தி கல்முனை மாந கரில் நேற்று புதன்கிழமை அமைதிவழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நிலையான அரசியல் தீர் வுக்கான 100 நாட்கள் செயல் முனையின் 3ஆவது வருட நிறைவை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகா ணத்துக்கு மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி இந்தப் போராட்டம் மேற்கொள்ளப் பட்டது. இதில், பங்கேற்ற மக் கள் பதாதைகளை ஏந்தி அமை தியான முறையில் போராட் டத்தை முன்னெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-01)

# ஹெரோயினுடன் பெண் கைது!

மட்டக்களப்பு, ஒக. 07

ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒரு வர் கைது செய்யப்பட் டுள்ளார்.

வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை பகுதியில் நேற்று முன் தினம் இரவு வீடு ஒன்றை முற்றுகையிட்டபோதே இந்தக் கைது இடம் பெற்றது.

கைதானவர் 45 வயதுடையவர் எனவும் இவர் நீண்டகாலமாக போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாவட்ட குற்ற புல னாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலை யடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவின் ஆலோச னைக்கு அமைவாக இந்தக் கைது இடம்பெற் றது.

கைதின்போது, சந் தேகநபரிடமிருந்து 2 கிராம் 330 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப் பட்டது என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

# உலக பழங்குடிகள் தினம் மூதூரில் கொண்டாட்டம்

திருகோணமலை, ஒக. 07

உலக பழங்குடிகள்தின நிகழ்வு மூதூர் - சந்தன வெட்டை கிராமத்தில் நடை பெற்றது.

நேற்று முன்தினம் நடை பெற்ற இந்த நிகழ்வை திரு கோணமலை குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பு, சிவில் அமையம் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

"இலங்கையின் கரையோர பழங்குடி மக்களின் உரிமை களை நிலைநாட்ட ஒன்றி ணைவோம் " எனும் தொனிப் பொருளின் கீழ் இவ் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பழங்குடி சமூக பாரம்பரிய பூஜை இடம் பெற்றன. அத்துடன், பழங்குடி சமூகத்திலிருந்து பல்கலைக் கழகம் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக் கப்பட்டன.

மேலும், காட்டுக்கு தேன் எடுக்கச் செல்வோருக்கு அரச அனுமதியுடனான அடையாள அட்டையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. இதேவேளை தேன், குளத்து மீன் கருவாடு, பழங்குடியி னரின் உணவான வள்ளிக்கி ழங்கு, அல்லைக்கிழங்கு என் பன நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினருக்கு சிற்றுண்டி உணவாக பகிரப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு பழங்குடி அமைப்பின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம், திரு கோணமலை குவேனி பழங்குடி அமைப்பின் தலைவர் நடராசா கனகரெட்ணம் , கிழக்கு பல்கலைகழக விரிவுரையாளர் பேராசிரியர் சி.ஜெயசங்கர், திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் சோ. லதா மங்கேஸ், மூதூர் பிரதேச செயலக கலாச்சார உத்தியோ கத்தர் தாமரை மனாலன் லலிதாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ஐ)

# இரத்ததான முகாம்

அக்கரைப்பற்று, ஒக. 07

இரத்த தான முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் சாய்ந்தமருது சுகாதார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எஸ். பி. பௌண் டேஷன், ரியல் ப்ளாஸ்டர் விளையாட்டு கழகம், சிறீ லங்கா யுனைட்ஸ் ஆகிய அமைப்பினர் இணைந்து இந்த இரத்ததான முகாமை முன்னெடுத் துள்ளனர். (ஐ)

# மனைவியை கொலை செய்த கணவருக்கு மரண தண்டனை

திருகோணமலை, ஒக. 07

மனைவியை கொலை செய்த கணவனுக்கு மரண தண்டனை வழங்கி திரு கோணமலை மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை இந்த வழக்கு திருகோணமலை மேல் நீதி மன்ற நீதிபதி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த தீர்ப்பு வழங்கப் பட்டது.

கடந்த 2019 ஜனவரி 22 ஆம் திகதி கந்தளாய் பகுதியில் 29 வயதுடைய தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் திட்டமிட்டு கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை நீதி மன்றில் குறித்த வழக்கு இடம் பெற்று வந்தது.

கந்தளாய் - பேராறை சேர்ந்த 28 வயதான கணவரே அந்தக் கொலையை செய்தார் என்று எதிரிகள் சார்பில் வழங் கப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் குற்றம் நிரு பிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து குற்ற வாளிக்கு நீதிபதி என். எம். எம். அப்துல்லாஹ் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான பதற்றத்துக்கு காஷ்மீர் பிரச்னையே அடிப்படை

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஓக. 07


"இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்துக்கு முக்கிய காரணம் காஷ்மீர் பிரச்னைதான்", என்று பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.

இஸ்லாமாபாத்தில் பேரணி ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பாகிஸ்தானின் ஆயுதப்படைகளும் அதன் மக்களும் எந்தவோர் ஆக்கிரமிப்புச் செயலுக்கும் உறுதியான பதிலை அளிக்கும் திறன் கொண்டவர்கள். இஸ்லாமாபாத் அனைத்து அயல் நாடுகளுடனும் நட்புறவை விரும்புகிறது. மோதலை விட உரையாடல் மற்றும் இராஜதந்திரத்தை பாகிஸ்தான் விரும்புகிறது.

ஐ. நா. பாதுகாப்பு சபை தீர்மானங்களின்படி காஷ்மீர் மக்களின் விருப்பமும் விருப்பங்களும் மட்டுமே முன்னோக்கி செல்லும் ஒரே வழி. காஷ்மீர் பிரச்னைக்கு நியாயமான தீர்வு காண்பது பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கையின் முக்கிய கொள்கை. இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்துக்கு முக்கிய காரணம் காஷ்மீர் பிரச்னைதான் - என்றார். (ஐ)

# 2035இல் நிலவுக்கு விண்கலம் அனுப்புகின்றது பாகிஸ்தான்



கராச்சி, ஓக. 07

2035ஆம் ஆண்டில் நிலவில் விண்கலத்தை தரையிறக்கவுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

சீனா சென்றுள்ள பாகிஸ்தான் அமைச்சர் ஹசன் இக்பால் இந்த அறிவிப்பை வெளியிட்டதுடன், இந்தத் திட்டத்துக்கு "சீனாவின் உதவி அவசியம்", என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் விண்வெளி முகமையான சுபார்கோ (ஸுஞுயசஊஜ) இதுவரை தனியாக செயற்கைகோள் அல்லது விண்வெளி திட்டம் என எதையும் மேற்கொண்டது இல்லை. சீனாவின் ஆதரவுடன்தான் செயல்படுகிறது. காலநிலை மாற்றம் சார்ந்த அச்சுறுத்தலை சமாளிப்பது தொடர்பாக கடந்த மாதம் பாகிஸ்தான் விண்ணில் நிலைநிறுத்திய ரிமோட் சென்ஸிங் செயற்கைக் கோள் சீனாவில் இருந்து ஏவப்பட்டது. பாகிஸ்தான் கொடியுடன் அது ஏவப்பட்டாலும் தொழில்நுட்ப உதவியை சீனாவே வழங்கியதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, அடுத்த ஆண்டு பாகிஸ்தானை சேர்ந்த விண்வெளி வீரரை விண்ணுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், சீனாவின் சாங் -8 ஊாயபெ'ந - 8 திட்டத்திலும் பாகிஸ்தான் அங்கம் வகிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச அளவிலான சந்திரனை ஆய்வு செய்வதற்கான ஆராய்ச்சி நிலையம் தொடர்பான திட்டத்தில் ஒரு பகுதியாகும். பாகிஸ்தானின் இந்த விண்வெளி சார்ந்த முயற்சிகளில் சீனாவின் பங்கு இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1961இல் சுபார்கோவை நிறுவியது பாகிஸ்தான். இருப்பினும் விண்வெளி திட்டம் சார்ந்த பணிகளுக்கு போதுமான நிதி ஒதுக்கப்படாதமையால் அதன் பணிகளில் பின்னடைவு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீசா பெறுவோர் ரூ. 45 இலட்சம் வைப்பிலிடுவது கட்டாயமாகிறது

## திட்டத்தை பரிசீலிக்கிறது அமெரிக்கா

வாஷிங்டன், ஓக. 07

45 இலட்சம் ரூபாயை வைப்பு பணமாக செலுத்தி னால் மட்டுமே இனி அமெ ரிக்க வீசா வழங்கப்படும் - என்ற திட்டத்தை சோதனை முறைமையில் நடைமுறைப் படுத்த அமெரிக்கா திட்டமிட் டுள்ளது.

அமெரிக்காவுக்குள் சட்டவிரோத குடியேற்றங்களை தடுப்பதில் கடும் போக்கை யாளர் கிறார் ஜனாதிபதி ட்ரம்ப்.

இந்த நிலையிலேயே, தற்காலிக பயணமாக அமெரிக்கா செல்ப வர்கள்15 ஆயிரம் டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 45 இலட் சம் ரூபாயை வைப்பிலிட வேண்டும் என்ற திட்டத்தை பரிசீலிக்க தயாராகி வருகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டில் அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு துறையின் அறிக்கையின்படி அந்த ஆண்டில் 5 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வீசா காலம் கடந்தும் அமெரிக்காவில் தங்கியிருந் தனர் என்று கூறப்படுகிறது.

எனவே, வீசா காலத்தை கடந்து எந்த வெளிநாட்டினரும் தங்கக் கூடாது என்பதற்காக இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது. (ஐ)

# காஸாவை முழுமையாக கைப்பற்றப் போகிறோம்

## இஸ்ரேலின் அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பு



ஜெருசலேம், ஓக. 07

**காஸா பகுதியை முழுமையாகக் கைப்பற்றப் போகிறோம் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்தார் என்று அந்த நாட்டின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

ஆனால், இஸ்ரேலின் இந்தத் திட்டத்துக்கு இராணுவ தளபதி ஐமீர் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. மேலும், மொசாட் தலைவர் டேவிட் பார்னியா மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் போர் நிறுத்தத்தையே ஆதரிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறுகையில், "காஸாவில் உணவு விடயத்திலேயே கவனம் செலுத்துகிறோம். காஸாவை கைப்பற்றுவது என்பது இஸ்ரேலை பொறுத்தது", என்று கூறியுள்ளார்.

இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதன் மூலம் பேரழிவுகள் ஏற்படும் என்று ஐ. நா. உயர் அதிகாரி ஒருவர் அச்சம் வெளியிட்டுள்ளார் - என்பதும் குறிப்பிடத்தக்கது.

காஸாவின் 75 சதவீதமான பகுதிகள் தற்போது இஸ்ரேல் வசமுள்ளது. மீதமுள்ள 25 சதவீத பகுதிக்குள் சுமார் 90சதவீதமான - 21 இலட்சம் பலஸ்தீனர்கள் தஞ்சமடைந்துள்ளனர். பட்டினியாலும் இஸ்ரேலின் தாக்குதலாலும் தினமும் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் காஸாவில் கொல்லப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவில் பெருவெள்ளம்: 100 பேர் மாயம்!

புதுடில்லி, ஓக. 07

இந்தியாவின் உத்தராண்டில் மேகவெடிப்பால் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் சிக்கி ஐவர் உயிரிழந்தனர். 100இற்கும் மேற்பட்டவர்களை காணவில்லை என்று தெரிய வருகிறது.

உத்தராகண்டின் பிரபலமான கோயில் அமைந்துள்ள கங்கோத்ரி பகுதியிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மேகவெடிப்பு ஏற்பட்டது. இதனால் கீர் கங்கா நதியில் திடீரென பெருவெள்ளம் ஏற்பட்டது. இதில் தரலி என்ற கிராமம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

மீட்புப் பணிகளில் இதுவரை 5 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஏராளமானோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும், 100இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்று கூறப்படுகிறது.

# அடுத்தாண்டு பெப்ரவரி பங்களாதேஷில் தேர்தல்

டாக்கா, ஓக. 07

பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று அந்த நாட்டின் இடைக்கால தலைவர் முகமது யூனுஸ் அறிவித்துள்ளார்.

பங்களாதேஷில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் மாணவர் போராட்டம் வெடித்தது. இதைத் தொடர்ந்து பிரதமர் ஷேக் ஹஸீனா இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

அங்கு தற்போது, இராணுவத்தின் கண்காணிப்பில் முகமது யூனுஸ் இடைக்கால தலைவராக செயல்பட்டு வருகிறார். அவர் தலைமையிலான இடைக்கால அரசாங்கம் ஆட்சி செலுத்துகிறது. இந்த நிலையில், எதிர்வரும் டிசெம்பருக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று இராணுவ தளபதி



வேக்கர் உஸ்ஜமான் அழைப்பு விடுத்திருந்தார்.

ஷேக் ஹஸீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி தடை செய்யப்பட்ட நிலையில், அந்நாட்டின் ஒரே பெரிய கட்சியான பங்களாஷே் தேசியக் கட்சி தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, தேர்தலை உடனே நடத்தாமல் தாமதிப்பதாக யூனுஸ்மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இந்த நிலையில், பங்களாதேஷில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்று முகம்மது யூனுஸ் அறிவித்துள்ளார். (ஐ)

# பயங்கரவாத உட்கட்டமைப்புகளை மீளவும் நிறுவ பாகிஸ்தான் ஆதரவு

புதுடில்லி, ஓக. 07

பாகிஸ்தான் மீது இந்தியா நடத்திய ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் அழிக்கப்பட்ட பயங்கரவாத உட்கட்டமைப்புகள் மீண்டும் நிறுவப்படுகின்றன. இதற்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. 100 கோடி ரூபி (இலங்கை மதிப்பிலும் சுமார் 100 கோடி ரூபாய்) வழங்கியுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் காஷ்மீரிலுள்ள பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி சுற்றுலாவிகள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில், 26 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடியாக ஒப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்தியா பாகிஸ்தான் மீது தாக்குதல்களை நடத்தியது. 9 பாகிஸ்தானில் இயங்கும் பயங்கரவாத உட்கட்டமைப்புகளை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே மோதல் நிலைமை ஏற்பட்டது. எனினும், 4 நாட்களில் பதற்ற நிலைமை முடிவுக்கு வந்தது.

இந்த நிலையிலேயே, ஒப்ரேஷன் சிந்தூர் தாக்குதலில் அழிக்கப்பட்ட உட்கட்டமைப்புகளை மீண்டும் நிறுவுவதற்கு பயங்கரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் நிதியுதவி அளித்துள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ. எஸ். ஐ. இனால் இந்தத் திட்டம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது என்றும் புதிய முறைகள், நவீன தொழில்நுட் பங்களின் உதவியுடன் இந்திய இராணுவம் கண்காணிக்க முடியாதபடி இந்த உட்கட்டமைப்பு கட்டமைக்கப்படுகிறது என்றும்கூறப்படுகிறது.

இதற்காக, இந்தியாவால் தடை செய்யப்பட்ட பயங்கர வாத அமைப்புகளுக்கு அந்த நாட்டின் பணத்தில் 100 கோடி ரூபிகளை ஐ. எஸ். ஐ. வழங்கியுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. வீரர் ரிம் டேவிட்டுக்கு அபராதம் விதித்தது ஐ. சி. சி.

சிட்னி, ஒக. 07


அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர் ரிம் டேவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சென்று 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடியது. இந்தத் தொடரை 5-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா முழுமையாகக் கைப்பற்றியது.

இதில், 5ஆவது போட்டி கடந்த ஜூலை 28ஆம் திகதி நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்கேற்ற அவுஸ்திரேலிய வீரர் ரிம் டேவிட் விதிகளை மீறினார் என்று கூறப்பட்டது.

இதையடுத்து, ஐ. சி. சி. ரிம் டேவிட்டுக்கு போட்டி கட்டணத்திலிருந்து 10 சதவீதம் அபராதம் விதித்ததுடன், ஒரு தகுதி புள்ளியையும் குறைத்துள்ளது.

கள நடுவரின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்காகவே அவர் மீது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ)



கனடா ஓபின் ரென்னிஸ்:

## ஷெல்டன், டெய்லர் அரையிறுதிக்கு தகுதி

ரொறன்ரோ, ஒக.07

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரின் அரையிறுதிக்கு பெஞ்சமின் ஷெல்டன், டெய்லர் ஃபிரிட்ஸ் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கனடா ஓபின் ரென்னிஸ் தொடர் ரொறன்ரோ நகரில் நடக்கிறது. இதில் ஆண்களுக்கான காலிறுதி ஆட்டம் ஒன்றில் அலெக்ஸ் டி மினௌர் (அவுஸ்திரேலியா) மற்றும் பெஞ்சமின் ஷெல்டன் (அமெரிக்கா) ஆகியோர் மோதினர். இந்த ஆட்டத்தில் ஷெல்டன் 6-3, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் டெய்லர் ஃபிரிட்ஸ் (அமெரிக்கா) மற்றும் ஆண்ட்ரி ரூப்லேவ் (ரஷ்யா) ஆகியோர் மோதினர்.

இந்த ஆட்டத்தில் டெய்லர் ஃபிரிட்ஸ் 6-3, 7-6 (7-4) என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

அரையிறுதி ஆட்டத்தில் ஷெல்டன்- டெய் லர் ஃபிரிட்ஸ் இன்று மோதுகின்றனர். (ஐ)

## ஷுப்மன் கில்லை ஒருநாள் அணிக்கும் தலைவராக்கலாம்

### சுனில் கவாஸ்கர் ஆலோசனை



மும்பை, ஒக. 07

“ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணிக்கும் ஷுப்மன் கில்லை அணித் தலைவராக நியமிக்கலாம்”, என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ்கர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சென்ற இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடர் 2 - 2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்தத் தொடரில் இந்திய அணியை வழிநடத்திய ஷுப்மன் கில்லுக்கு இது முதல் தொடராகும். முதல் தொடரிலேயே அவர் சாதித்துக் காட்டியுள்ளார். அத்துடன், அவர் இந்தத் தொடரில் மட்டும் 754 ஓட்டங்களையும் குவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, ஒருநாள் போட்டிக்கான இந்திய அணிக்கும் ஷுப்மன் கில்லை தலைவராக நியமிக்கலாம் என்று சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார். (ஐ)



## கனடா ஓபின் ரென்னிஸ் ஒசாகா அரையிறுதியில்!

ரொறன்ரோ, ஒக. 07

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜப்பானின் நவோமி ஒசாகா அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

கனடா ஓபின் ரென்னிஸ் தொடர் ரொறன்ரோ நகரில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனைகளான ஜப்பானின் நவோமி ஒசாகா, உக்ரைனின் எலினா ஆகியோர் மோதினர்.

இந்தப் போட்டியில் 6 - 2, 6 - 2 என்று இலகுவான வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார் நவோமி ஒசாகா. (ஐ)

## நியூசிலாந்து வீரர் திடீர் விலகல்



வெலிங்டன், ஒக. 07

சிம்பாவே அணிக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் போட்டியிலிருந்து நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் வில்லியம் ஓ ரூர்க் விலகியுள்ளார்.

சிம்பாவே சென்றுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது. இந்த நிலையில், அந்தப் போட்டியிலிருந்து நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் வில்லியம் ஓ ரூர்க் விலகி உள்ளார். முதுகு பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் விலகியுள்ளார்.

அவருக்கு பதிலாக இடது கை வேகப்பந்து வீச்சாளர் பென் லிஸ்டர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## கனடா ஓபின் ரென்னிஸ் மேடிசன் அதிர்ச்சி தோல்வி

ரொறன்ரோ, ஒக. 07


கனடா ஓபின் ரென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் மேடிசன் கீஸ் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

கனடா ஓபின் ரென்னிஸ் தொடர் ரொறன்ரோ நகரில் நடக்கிறது. இதில், நேற்று நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனைகளான அமெரிக்காவின் மேடிசன் கீஸ், டென்மார்க்கின் கிளாரா டவுசன் ஆகியோர் மோதினர்.

இதில், எளிதில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறுவார் என எதிர்பார்க்கப்பட்ட மேடிசன் கீஸ் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் 1-6, 4-6 என்ற செற் கணக்கில் கிளாரா டவுசனிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தார். (ஐ)



## சின்சினாட்டி ரென்னிஸ் ஜோகோவிச் திடீர் விலகல்



நியூயோர்க், ஒக. 07

அமெரிக்காவின் சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரிலிருந்து பிரபல வீரர் ஜோகோவிச் விலகியுள்ளார்.

மருத்துவ காரணங்களால் அவர் தொடரிலிருந்து விலகவில்லை என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜோகோவிச், கடந்த மே மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற தொடரை வென்று 100ஆவது டூர்-லெவல் பட்டத்தைக் கைப்பற்றினார். அதன்பின் பிரெஞ்சு ஓபின், விம்பிள்டனில் அரையிறுதி வரை முன்னேறினார்.

இரண்டு அரையிறுதி போட்டிகளிலும் அவர் சின்னரிடம் தோல்வியடைந்தார்.

சின்சினாட்டி தொடரில் விளையாடாத போதிலும் அமெரிக்க ஓபின் தொடரில் ஜோகோவிச் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

செய்யும் நடவடிக்கைகள் இரண்டு தினங்கள் இடம்பெற்றன.

இந்தப் பணிகள் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்துள்ள நிலையிலேயே, அது தொடர்பான அறிக்கைகள் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்துள்ளார். (அ)

## உள்ளூராட்சி...

வெளிப்படுத்தப்பட்ட வர்த்தமானியை மீளப்பெறுவீர்களா என்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற கேள்வி மீதான விவாதங்களின்போது நகர அபிவிருத்தி அமைச்சர் அனுர கருணாதிலகவிடம் கேள்வியெழுப்புகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்து பிரதேச சபைகளின் எல்லைகளையும் நகர அபிவிருத்தி பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனாலேயே தையிட்டி விகாரை உள்ளிட்ட பிரச்சினைகள் எழுந்தன. இது போன்று பல பிரச்சினைகள் எழுந்ததற்கு காரணம் உள்ளூராட்சி மன்றங்களை நகர அபிவிருத்தி சபைகளாக வெளிப்படுத்தப்பட்டதுதான்.

எனவே இது குறித்ததான வர்த்தமானியை உடனே மீளப்பெறுவீர்களா?- என்றார். (அ)

## ஐ. நாவுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை பாராளுமன்றத்தினால் பதவியில் இருந்த தேசபந்து தென்னக்கோனை பதவி விலக்குகின்ற பரிந்துரை செய்யும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

அதிகாரிகளை பதவியிலிருந்து விலக்குகின்ற சட்டம் முதன் முதலில் பாவிக்கப்பட்டிருக்கின்றது.

இது 17 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதாவது அரசியலமைப்பு பேரவை உருவாக்கப்பட்டதன் பின்பு அந்த அரசியலமைப்பு பேரவையினால் பதவியில் அமர்த்தப்படும் இரண்டு அதிகாரிகளான சட்டமா அதிபர், பொலிஸ் மா அதிபர் இவர்களை பதவியில் இருந்து நீக்குவதற்கான வழிமுறை ஒன்று இச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

இருபது வருடங்களுக்கு மேலாக இயங்காமல் இருந்த இந்த சட்டம் முதன் முறையாக நடைமுறைக்கு வந்துள்ளது. ஆகவே இது ஒரு முக்கியமான விடயம். சுயாதீனமான இந்த பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் வேறு விதமாக பதவி நீக்கப்பட முடியாது.

இந்த பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது ஒருவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. அரசாங்கம் எதிர்க்கட்சி என்ற பிரிவினை இல்லாமல் வாக்களிக்கப்பட்டுள்ளது என்பது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

குறிப்பாக சிரானி பண்டாரநாயக்காவை பதவி நீக்கும்போது பாராளுமன்றம் இரண்டாகப் பிரிந்தது அந்தப் பதவி நீக்க பிரேரணையானது தவறான முறையில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின் தவறான பிரேரணை என்ற அடிப்படையில் அவர் மீளவும் பதவியில் அமர்த்தபட்டார்.

இம்முறை சுயாதீன பதவியில் உள்ள ஒருவர் எதேச்சதிகாரமாக பதவி நீக்கப்படாமல் விசாரணை குழு அறிக்கையினை வைத்து அதனை பாராளுமன்றத்தில் விவாதித்து மிகப்பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது-என்றார். (அ)

## 5 ஆண்டுகளில்...

சீனாவிற்கு மேற்கொண்ட பயணத்தின் போது சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடனான கலந்துரையாடல்களில் இந்தக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (அ)

## சஷீந்திர...

இது தொடர்பான விசாரணை மேற்கொள்வதற்காக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு சஷீந்திர ராஜபக்ஷ நேற்று அழைக்கப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னர் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தில் உள்ள பலரின் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையிலேயே சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## செம்மணியில்...

அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை செருப்பு , தாயம் , காசு, உள்ளிட்ட சான்று பொருட்கள் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட நிலையில் அவை நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த 16 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில், 68 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" என நீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (அ)

## மன்னாரில்...

சூழலியல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை, சுற்றுச்சூழல் அதிகார சபையிடம் சமர்ப்பித்திருந்தது.

அதற்கு, சுற்றுச்சூழல் அதிகார சபை, சாதகமான அறிக்கையை வழங்கியுள்ளது.

அதனையடுத்து, பல் தேசிய நிறுவனங்களுக்கு மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படுவதற்கு, வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இல்மனைட் மணல் அகழ்வு செய்யப்பட்டால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள், மக்களின் வாழ்விடங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து, பூர்வீக நிலங்கள் அழிவடைய வாய்ப்பு ஏற்படும்.

இந்த அழிவைத் தடுக்கவும், எமது பூர்வீக நிலங்களையும் மக்களின் இருப்பையும் பாதுகாக்கவும், "கருநிலம் பாதுகாப்பு" என்ற கருப்பொருளுடன், மக்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் போராட்டம் நேற்று மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது, இளையோர் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

பேரணி, மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் ஆரம்பமாகி, மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை வீதியை சென்றடைந்து, அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக, மன்னார் நகர சுற்று வட்ட பகுதியை அடைந்தது.

தொடர்ந்து, கனிம மணல் அகழ்வுக்கு எதிராக, ஜனாதிபதிக்கு அனுப்பும் வகையில், தபாலட்டையில் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தின் ஒரு அங்கமாக, விழிப்புணர்வு நாடகம், கையெழுத்து பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் இன்றும் இடம்பெற்று, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (அ)

# தவறுதலாக சி.ஐ.டிக்கு சென்ற சாகல

கொழும்பு, ஓக. 07

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க, தவறுதலாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்றுக் காலை சென்றுள்ளார்.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், தவறுதலாக குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்குச் சென்றுள்ளார்.

பின்னர், அங்கிருந்து வெளியேறி நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் அவர் முன்னிலையானார். (அ)

# வெளிநாட்டில் பணிக்கு சென்ற 4,794 இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 07

வெளிநாடுகளில் பணிக்குச் சென்ற 4794 இலங்கையர் பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது. இதில் 3179 ஆண்களும் 1615 பெண்களும் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்துக்கு அமைவாக முன்வைக்கப்பட்ட தகவல் கோரிக்கைக்கு அமைய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியாகிய தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் சென்றவர்களில் அதிகமானோர் இயற்கை மரணம் எய்தியுள்ளனர். இவ்வாறு குறித்த காலப்பகுதியில் 3242 பேர் உயிரிழந்துள்ளனர்.

நீரில் மூழ்கி 428 பேரும், வீதி விபத்துக்களால் 446 பேரும் , 377 பேர் உயிரை மாய்த்தும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் 61 இலங்கையர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் அதிகமானோர் கொழும்பு, காலி, கம்பஹா, கண்டி, களுத்துறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் 3124 உடல்களை இலங்கைக்குக் கொண்டுவருவதற்காக 92.8 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகவும், 224 உடல்களை அந்நாடுகளிலேயே நல்லடக்கம் செய்வதற்காகவும் போக்குவரத்துக்கும் 98.26 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2010 ஜனவரி முதல் 2024 டிசம்பர் வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்குச் சென்று நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த 72,718 பேர் அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்குச் சொந்தமான பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சவுதி அரேபியா, குவைத், ஜோர்தான், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் பாதுகாப்பு இல்லங்களில் அதிகமானோர் தங்கவைக்கப்பட்டு, பின்னர் சொந்த நாடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

மேலும் 2024 ஆம் ஆண்டு நிறைவடையும் வரையில் 91 இலங்கையர்கள் தொடர்ந்தும் தூதரகங்களிலுள்ள பாதுகாப்பு இல்லங்களிலேயே தங்க வைக்கப்பட்டிருந்ததாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# "இஸ்ரேலின் கொலனியாகியுள்ளது இலங்கை"

கொழும்பு, ஓக. 07

அறுகம்குடா பிரதேசத்தில் இருக்கும் காணிகள் இஸ்ரேலுக்கு உரித்தாகி வருவதன் மூலம் இலங்கை இஸ்ரேலின் கொலனியாகியுள்ளது. இஸ்ரேல் இராணுவத்தில் இருக்கும் கொலை குற்றவாளிகள் மன ஆறுதல் பெறுவதற்கு இலங்கைக்கு வருகிறார்கள். இவர்களுக்கு அரசாங்கம் தற்போது இலவச விசா வழங்குகிறது என எஸ்.எம். மரிக்கார் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கட்சியில் இருக்கும்போது பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவித்து, இஸ்ரேலுக்கு எதிராக அமெரிக்க தூதரகத்துக்கு முன்னாலும் வேறு இடங்களிலும் போராட்டங்களை முன்னெடுத்து வந்தது. ஆனால் இன்று இரண்டு மூன்று கொள்கைகளை கடைப்பிடித்த வருகிறது.

அறுகம்குடா பிரதேசத்தில் இருக்கும் காணிகள் இஸ்ரேலுக்கு உரித்தாகி வருகின்றன. அந்த பகுதியில் இஸ்ரேல் இராணுவத்தின் மனித கொலைகாரர்கள், யுத்தக்குற்றம் இளைத்தவர்கள். அவர்கள் மன ஆறுதல் அடைவதற்கு இங்கு வருகிறார்கள். அந்தபகுதியில் ஹோட்டல்களை அமைத்துக்கொண்டு, இலங்கையர்களுக்கு செல்ல முடியாது. வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் என தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. நாட்டுப்பற்று தொடர்பில் கதைத்து ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் தற்போது ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறது.

6 மாதங்களுக்கு முன்னர் இங்குவந்த இஸ்ரேல் இனத்தவர்கள் பாரியளவில் இருக்கின்றனர்.இவ்வாறு இருக்கையில் அரசாங்கம் தற்போது இஸ்ரேலுக்கு இலவச விசா வழங்கி இருக்கிறது.

அரசாங்கத்தில் இருக்கும் முஸ்லிம் எம்.பிக்கள் எங்கே என கேட்கிறோம்.

அந்த பிரதேசத்தில் இருக்கும் முஸ்லிம் மக்களைவிட தமிழ், கிறிஸ்தவ பெண்கள் மற்றும் பிள்ளைகள் கையாட்களாகி இருக்கிறார்கள்.அந்த பிரதேசம் எவ்வாறு நிர்வகிக்கப்படுகிறது என்பது இராணுவத்தினருக்கு புரிகிறது. ஆனால் பொலிஸார் எதனையும் கண்டும் காணாமல் போன்று, செயற்படுகிறார்கள். அவர்களுக்கு மேலிடத்தில் இருந்து யாராவது அழுத்தங்களை கொடுக்கிறார்களோ தெரியாது. அறுகம்குடா பிரதேசத்தை இஸ்ரேலின் கொலனியாக்குவதற்கு இந்த அரசாங்கம் இடமளிக்கப் போகிறதா - என்றார்.

## ஒரு வாரத்தி...

நீதித்துறை சேவை ஆணைக்குழு பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையில் உள்ளது. உயர்நீதிமன்ற நீதியரசர் மகிந்த சமயவர்தன உறுப்பினராக பணியாற்றுகிறார்.

நீதியரசர் காமினி அமரசேகர ஓய்வு பெற்றதால் காலியாக உள்ள மூன்றாவது இடத்தை அரசியலமைப்பு சபை இன்னும் நிரப்பவில்லை. உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன அல்விஸ் தற்போது ஆணைக்குழுவின் செயலாளராக பணியாற்றுகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணிப் புதைகுழி அகழ்வில் நீதி அமைச்சு அரசியல் தலையீடு!

## சபையில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 07

**செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வில் நீதி அமைச்சு அரசியல் ரீதியாக தலையீடு செய்கின்றது. நீதி அமைச்சின் செயலாளர் அகழ்வில் ஈடுபடுவோருடன் நேரடித் தொடர்பில் இருக்கின்றார். இது அரசியல் மயப்படுத்தும் நடவடிக்கையாகும் - என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. குற்றஞ்சாட்டியுள்ளார்.**



அத்துடன், தடயப்பொருட்கள் அடையாளப்படுத்தப்படும் இடத்தின் வாசலில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் சிஐடியினர் இருக்கின்றனர். இது மக்களை அச்சுறுத்தும் செயலாகும் எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார எம். பி,

செம்மணி மனித புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட தடயப் பொருட்களை பொதுமக்களுக்கு முன்பாக வைத்து அவர்கள் அதனை அடையாளப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதற்கமைய செம்மணியில் பொது மக்களை அழைத்து அந்த தடயப்பொருட்களை அடையாளம் காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், நீதி அமைச்சின் செயலாளர், அங்கே வேலை செய்து கொண்டிருக்கின்ற , இந்த எலும்புக்கூட்டு அகழ்வு செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கின்றார்.

இதனை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். இது அரசியல் மயப்படுத்தும் வேலைத்திட்டம் அல்லவா?இது அரசியல் தலையீடு இல்லையா?இது ஒரு அழுத்தத்தை கொடுக்கும் விடயம் அல்லவா?.

நீதிமன்றம் நடத்துகின்ற ஒரு செயற்பாட்டில் உங்களுக்கு தகவல் வேண்டும் என்றால் நீங்கள் நீதிமன்றத்திற்குத்தான் போக வேண்டும்-என்றார். (அ)

# பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக வரவுள்ளது பிரேரணை

கொழும்பு, ஓக. 07

பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜெயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் ஏகமனதாக எடுத்துள்ளன.

குறித்த பிரேரணை எதிர்வ ரும் 11 ஆம் திகதி சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட வுள்ளது. (அ)

# சர்வதேசத் தர நிலைகளுக்கு இணங்க செம்மணி மனித புதைகுழி விசாரணை

## பிரிட்டன் எம்.பி. உமா குமரன் வலியுறுத்து

லண்டன், ஓக. 07

செம்மணி மனித புதைகுழி தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரநிலைகளுக்கு இணங்க விசாரணை நடைபெறுவதை உறுதி செய்ய சர்வதேச சமூகம் ஒன்றுபட வேண்டும். என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணியில் உள்ள மனிதப் புதைகுழியின் அளவு பெரும்பேரழிவு.

அகழப்படும் ஒவ்வொரு புதைகுழிக்கு பின்னாலும் துயரத்தில் சிக்குண்ட உண்மை மற்றும் நீதியை தேடும் ஒரு குடும்பம் உள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரநிலைகளுக்கு இணங்க விசாரணை நடைபெறுவதை உறுதி செய்ய சர்வதேச சமூகம் ஒன்றுபடவேண்டும்.

பிரிட்டன் மனித புதைகுழிதொடர்பான விசாரணைக்கு தொழில்நுட்ப உதவியை வழங்குமா என கேள்வியெழுப்பியிருந்தேன்.

இந்த விடயம் குறித்து சமீபத்தில் பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளருக்கு நான் கடிதம் எழுதினேன்

அதனை வாசித்துக்கொண்டிருப்பதை அவர் உறுதி செய்தார். சர்வதேச நட்பு நாடுகளுடன் இணைந்து இங்கிலாந்து நமது பங்கை முழுமையாக ஆற்ற வேண்டும்.பாராளுமன்றம் திரும்பியதும் நான் அவரைத் தொடர்புகொள்வேன்-என்றார். (அ)

# மனிதப் புதைகுழி விசாரணைக்கு அரசு இடையூறு ஏற்படுத்தவில்லை

## சபையில் கூறினார் அமைச்சர் பிமல்

கொழும்பு, ஓக. 07

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கு அரசாங்கம் எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. மாறாக தேவையான ஒத்துழைப்புகளே வழங்கப்பட்டுவருகின்றன என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணைகள் நீதிமன்ற கண்காணிப்புடன் இடம்பெற்றுவருகின்றன. தேவையான வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது.

வடக்கில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட சில குழுக்களுடன் இணைந்து யாழ். மாநகர சபையில் இவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர். செம்மணி புதைகுழியில் உள்ள சில எலும்புக்கூடுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்புடன் இணைந்துதான் இவர்கள் இப்படி ஆட்சியமைத்துள்ளனர்.

வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கே அதிக வாக்குகள் உள்ளன. நிச்சயம் நாம் நீதியை நிலைநாட்டுவோம்.

தெற்கில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனினும், இதனை எப்படியாவது மீள ஏற்படுத்துவதற்கு ராஜபக்ஷக்கள் முற்படுகின்றனர். வடக்கில் இவர்கள் முற்படுகின்றார்கள். அதனால்தான் ஏதேனும் ஒரு சம்பவத்தை தூக்கிப்பிடிக்கின்றனர்.

செம்மணி புதைகுழி தொடர்பான விசாரணைக்கு நாம் எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம்கூட ஒத்துழைப்பு கோரியுள்ளோம்.

தேசிய சமத்துவ அரசாங்கம் வந்துள்ளதால் இவர்கள் வடக்கில் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# இந்திய மீனவர்கள் நான்கு பேர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 07

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது, சட்டவிரோதமான முறையில் நெடுந்தீவு கடற்பரப்பினுள் படகொன்றில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நான்கு மீனவர்களையும் கைது செய்ததுடன் படகையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்ற கடற்படையினர் அவர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# சோமரத்ன ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை வேண்டும்!

## அவரது சகோதரி ரோஹினி வலியுறுத்தல்

கொழும்பு, ஓக. 07

செம்மணி தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியம் அளிப்பதற்குத் தயாராக இருப்பதாக மனைவியின் கடிதத்தின் ஊடாக தனது சகோதரரான சோமரத்ன ராஜபக்ஷ கூறியிருப்பதன் விளைவாக அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்பதால், அவருக்குரிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சோமரத்ன ராஜபக்ஷவின் சகோதரி ரோஹினி ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

யாழ். செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அத்தோடு யுத்தகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் நடாத்தப்பட்டுவந்த சித்திரவதைக்கூடங்கள் என்பன பற்றிய விபரங்களை வெளியிடுவதற்குத் தனது கணவர் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இவ்விவகாரம் பேசுபொருளாகியிருக்கும் நிலையில், வெலிக்கடை சிறைச்சாலையில் இருக்கும் தனது சகோதரரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் எனவும், அவரது பாதுகாப்பைப் பலப்படுத்துவற்கு சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ள அவரது சகோதரி ரோஹினி ராஜபக்ஷ, இதுகுறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இழக்கப்பட்ட மக்களின் பணத்தை மீளப் பெற நடவடிக்கை உண்டா?

## சமிந்த விஜேசிறி எம்.பி. கேள்வி

கொழும்பு, ஓக. 07

மோசடிகளின் காரணமாக இழக்கப்பட்ட மக்கள் பணத்தை மீளப்பெற எத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலை மையில் கூடியது. இதன்போதே அவர் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஊழல் மோசடிகளின் காரணமாக மக்களின் பணம் வீணடிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.சீனி வரி மோசடி, வெள்ளைப்பூண்டு மோசடி, தேங்காய் எண்ணெய் மோசடி அதேபோன்ற மத்திய வங்கிப் பிணை முறி மோசடி என்பன உள்ளடங்குகின்றன.

ஆகவே அந்த மோசடிகள் குறித்த விசாரணைகளின் முடிவுகள் எவ்வாறாக அமைந்துள்ளன? இந்த மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று இந்த மோசடிகள் தொடர்பில் எதிர் காலத்தில் கைது செய்யப்படவுள்ளவர்கள் யார் ? இந்த மோசடிகளால் இழக்கப்பட்ட மக்களின் பணத்தை மீளப்பெற எத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன-என்றார். (அ)

# கோபா தலைவர் பதவியிலிருந்து அரவிந்த சேனாரத்ன விலகினார்

கொழும்பு, ஓக. 07

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்த சேனாரத்ன, பொதுக் கணக்குகள் குழுவின் (கோபா) தலைவர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

கோபா தலைவர் பதவியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைக்க அரசாங்கம் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.அந்த செயல்முறை நடைபெற அனுமதிக்கவே தான் பதவி விலகுவதாகவும் அவர் கூறினார். (அ)

# ஊழல் குற்றச்சாட்டுகளில் 6 மாதத்தில் 63 பேர் கைது!

கொழும்பு, ஓக. 07

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில், கையூட்டல் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் கீழ் 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல வினாக்களுக்கான விடை அளிக்கும் நேரத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களில் அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகளும் அடங்குவதாகப் பிரதமர் தெரிவித்துள்ளார்.அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் கைது செய்யப்பட்டவர்களில், ஊழல் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட 7 அரசி யல்வாதிகளும் அடங்குவதாகப் பிரதமர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.